Registered as a Newspaper

உ
சிவமயம்
நாளை
மகா
சிவராத்திரி
அரன் நாமமே சூழ்க!
வையகமும் துயர் தீர்கவே!
ரெலிகுளோப்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

உ
சிவமயம்
நாளை சிவராத்திரி
விரதம் அநுட்டித்து
சிவ வழிபாடு செய்ய
இன்றே சைவப் பெருமக்கள்
ஆயத்தமாவார்களாக!
ரெலிகுளோப்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞ மாசி மீ 23 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 25 (07-03-1986) UTHAYAN ▲ LIVELY TAMIL DAILY கதிர்:94

★ இலங்கையில்

# அப்பாவித் தமிழர் கொன்று குவிப்பு

## ஐ.நா. மனித உரிமைக்குழு கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி

ஜெனீவா, மார்ச் 6

இராணுவம், கடற்படை, விமானப்படை மூலம் இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் செயல் தொடங்கிவிட்டது.

இது தமிழ் சமுதாயம் முழுவதையுமே பழிவாங்கும் செயலின் துவக்கம்.

ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இந்தியக் குழுத் தலைவர் டாக்டர் ஜே. எஸ். தில்லான் மேற்கண்டவாறு குரல் கொடுத்தார்.

மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டம் ஜெனீவாவில் நடைபெறுகின்றது.

இன்று (வியாழன்) இலங்கைத் தமிழர் பற்றி இந்தியக் குழுத் தலைவர் டாக்டர் தில்லான் பேசினார்.

டாக்டர் தில்லான் சொன்னதாவது;

மனித உரிமைகளை மீறும் வகையில் இலங்கையில் உள்ள இராணுவத்தினர் தமிழ் சிறுபான்மையினரை வகைதொகையின்றி கொல்வதில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் தமிழருக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்து வருவது நிருபணமாகியுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்து விட்டது. அமைதிப் பேச்சுக்கள் நிலைகுலைந்து விட்டதாகத் தோன்றுகிறது.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் தாக்குதலில் அப்பாவித் தமிழ் மக்கள் குறித்து வேறுபாடு காணப்படுவது இல்லை.

ஆண்,பெண், குழந்தை என்ற பேதமின்றி அனைவருமே வன்முறைக்காளாகி வருகின்றனர்.

அகதிகள்

இந்தியாவில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சுமார் 45, ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்.

இவர்கள் மீண்டும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

---

சுபநேரம்
07 - 03 - 1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.25 முதல் 7.55 வரை
ராகுகாலம்:
10.55 முதல் 12 25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

---

## ரூ. 15 லட்சம் பொருள்கள் டிப்போவில் அபகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 7

மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவில் ரூபா 15 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

புதன்கிழமை இரவு இச் சம்பவம் நடந்தது.

புதன்கிழமை இரவு 7. 15 மணி அளவில் மட்டக்களப்பு நகரில் வைத்து தனியார் வாகனம் ஒன்று கடத்தப்பட்டது.

இதனைக் கடத்தியவர்களே இ. போ. ச. டிப்போவுக்குச் சென்று கொள்ளையை நடத்தினர்.

பஸ் என்ஜின்கள், ரயர்கள், ரியூப்புகள், உதிரிப் பாகங்கள், பஸ் திருத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவையே கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்கள் ஆகும்.

## பெண்கள் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 7

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி யாழ்ப்பாணத்தில் பெண்களின் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நாளை 8ஆம் திகதி நடத்தப்பட உள்ளது.

ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி நடத்தும் இப்பேரணி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும்.

பெண் ஒடுக்குமுறை, வர்க்கஒடுக்குமுறை, சிறீ லங்கா அரசின் அடக்குமுறைகள் குறிப்பாக பெண்களைக் கைதுசெய்தல், விமானக் குண்டுத் தாக்குதல் ஆகியவற்றை எதிர்த்தே இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

பெண்கள் அனைவரையும் இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மீண்டும் பேச்சுவார்த்தை; புதிய நகல் திட்டத்தை இந்தியா தயாரிக்கிறது

புதுடில்லி,மார்ச்6

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக இந்தியா ஒரு நகல் திட்டத்தைத் தயாரிக்க உள்ளது

இலங்கை அரசின் யோசனைகள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் முதலியவற்றைப் பரிசீலித்தே இந்தியா தனது நகல் திட்டத்தைத் தயாரிக்கும்.

இந்திய வெளியுறவுக் கொள்கை வகுக்கும் குழு இதற்கான உத்தரவை வழங்கியுள்ளது.

இந்தியா தயாரித்து வழங்கும் திட்டத்தை அடிப்படையாக வைத்தே இரு தரப்பினரும் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன

## நாவற்குழி முகாமிலும் கறுப்புச் சட்டையர்

நல்லூர், மார்ச் 7

நாவற்குழி இராணுவ முகாமில் கறுப்புச் சட்டையினர் காவல் செய்கின்றனர்.

நேற்று முன் தினம் கறுப்புநிற ஹெலிக்கொப்டர் ஒன்றில் வந்திறங்கியதாகக் கூறப்படும் கறுப்புடை தரித்தவர்கள் நாவற்குழி முகாம் வாசலில் காவலுக்கு நிற்கின்றனர். முகாம் வளவினுள் நடந்தும் ரோந்து புரிகின்றனர்.

இதனால் நாவற்குழிப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. அவ் வீதியால் சைக்கிளில் செல்வோரும் தற்பொழுது கோப்பாய் ஊடாகவே செல்கின்றனர்.

# கன்னியாவில் தமிழ்க் குடும்பங்கள் வெட்டிக்கொலை

## விறகு வெட்டப் போனபோது மலையகத் தமிழருக்கு நடந்த கொடூரம்

திருகோணமலை, மார்ச் 7

திருகோணமலை கன்னியாப் பகுதியில் இருக்கும் மாங்காயூற்று என்ற இடத்துக்கு விறகு வெட்டச் சென்ற இரண்டு மலையகத் தமிழ் குடும்பத்தினர் கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு குடும்பங்களையும் சேர்ந்த ஆறு பேரின் சடலங்கள் நேற்று மாலை திருகோணமலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இப்பயங்கர சம்பவத்தில் உயிர் தப்பிய ஒரு தமிழ் இளைஞன் அவசர சிகிச்சைக்காக வாய்பேச முடியாத நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டான்.

முருகையா குமார் என்ற இந்த 23 வயது இளைஞனுக்கும் கழுத்தில் பலத்த வெட்டுக்காயம் உள்ளது.

ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களில் இரண்டு அடையாளம் காணப்பட்டன.

செல்வநாயகபுரம் வாசிகளான முருகையா தவமணி (வயது 43), காளி (வயது 22) ஆகியோரின் சடலங்களே

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சோவியத் சாம்-7 ஏவுகணை விடுதலை புலிகளுக்கு வருகிறது

## அன்ரன் பாலசிங்கத்தை ஆதாரம் காட்டி லண்டன் கார்டியன் தகவல்

லண்டன், மார்ச் 6

ஆகாயத் தாக்குதலை நடத்தக் கூடிய "சாம் - 7" ரக சோவியத் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விரைவில் கிடைக்க உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை வகுப்பாளர் அன்ரன் பாலசிங்கம் இப்படிச் சொன்னதாக லண்டன் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'பலத்தைப் பெருக்க ஏவுகணைகளைப் போராளிகள் பெறலாம்' என்ற தலைப்பில் லண்டன் கார்டியன் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

10,000 முதல் 15,000 வரை டயிற்சி பெற்ற தமிழ்ப் போராளிகள் உள்ளனரி. எல்லா அமைப்புக்களையும் சேர்ந்தவர்கள் இவர்கள்.

எமது மக்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவது இராணுவப் போராட்டமே.

இலங்கை ஆயுதப் படையினரின் புதிய தாக்குதல்களைச் சமாளிக்க நாம் தயாராக உள்ளேகம்.

தரைப்படைகள் வெளியே வந்து தாக்குதலை நடத்தத் தொடங்கியவுடன் நாம் பதில் தாக்குதலை ஆரம்பிப்போம்

ஆயுத படையினரிடம் உள்ள கனரக ஆயுதங்களை அழிப்பதே எமது முக்கிய நோக்கம்.

யுத்தம், பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

ஆயுதப்படைப் பலத்தை மேலும் பெருக்கும் அளவுக்கு இலங்கையின் நிதிநிலைமை இனி நின்று பிடிக்கும் என்று நாம் கருதவில்லை

அரசாங்கப் படைகள் விமானங்கள், ஹெலிக்கொப்டர்களைப் பாவிப்பதால் சாதகமான சூழ்நிலையில் உள்ளன.

இன்னும் ஆறுமாத காலங்களில் ஆகாயத் தாக்குதலை நடத்தக் கூடிய பலம் எமக்கும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கன்னுட்டியில் தேடுதல் ஒருவர் மரணம்!

### 200 குடும்பங்கள் அகதிகளாயின

யாழ்ப்பாணம்,மார்ச் 7

வவுனியா - மன்னார் வீதியில் கன்னுட்டி என்னும் இடத்தில் துப்பாக்கி குண்டு தாக்கி கோபால பிள்ளை என்பவர் மரணமானார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

வவுனியா - மன்னார் வீதியில் பூவரசங்குளத்துக்கும் பறையன்குளத்துக்கும் இடையில் கன்னுட்டி உள்ளது.

ஆயுதப்படையினரின் தேடுதலின்போது இச் சம்பவம் நடந்தது.

8 வீடுகள் அதன் பின்னர் எரிக்கப்பட்டன 200 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறின.

காயமடைந்த ஒருவர் நேற்று வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## கண்ணிவெடி! வவுனியாவில்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

நேற்று நண்பகல் 2.30 மணியளவில் வவுனியா இராணுவமுகாமிலிருந்து நடைபவனியாக மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுப் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் வழியில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகிய தாக அறியப்படுகிறது

செய்தி அச்சுக்குப் போகும்வரை இராணுவ தரப்பில் ஏற்பட்ட இழப்புப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

கண்ணிவெடி பலத்த சத்தத்துடன் வெடித்தது.

இதையடுத்து வவுனியா இராணுவ முகாமிலிருந்து பல வாகனங்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்தன.

## பூஸாவிலிருந்து 25 பேர் விடுதலை

கொழும்பு, மார்ச்.7

பூஸாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழர்களில் 25 பேர் நேற்று (வியாழக்கிழமை) விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட அனைவரும் மருதானைக் கப்பிதாவத்தை பிள்ளையார் கோயிலில் தங்க வைக்கப்பட்டனர்.

## மட்டக்களப்பில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 7

புதன்கிழமை இரவு ஏழு மணியளவில் பாரிய குண்டு ஒன்று மட்டக்களப்பு நகரில் வெடித்தது.

இதனால் பொதுமக்களில சிலர் காயம் அடைந்தனர்.மூவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.



விசாரணைக் கமிஷன்கள் வைக்கிறதில இலங்கையை யாரும் வெல்ல ஏலாது. ஆனால் அதுகளால ஏதாவது பலன் கிடைக்குதோ எண்டால் அது பூஜ்யம் தான்!

## செயலக உத்தியோகத்தர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

நேற்று முன்தினம் தாம் அழைத்துச் சென்ற யாழ் செயலக உத்தியோகத்தர் திரு. ஈ. கே.குமரையாவை விடுவித்ததாக தமிழ் ஈழ இராணுவம் நேற்று இரவு அறிவித்தது

இது சம்பந்தமாக தமிழ் ஈழ இராணுவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக இராணுவ முகாம்களிற்கும், பூஸா, வெலிக்கடை போன்ற சிறைக்கூடங்களிற்கும் சென்று சிறை வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள், முதியோர்கள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மலையக வன்செயலை விசாரிக்க குழு

கொழும்பு, மார்ச் 7

கடந்த மாதம் மலையகத்தில் இடம்பெற்ற வன்செயல்கள், அவற்றுக்கான பின்னணிகள் என்பவற்றை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்க உள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இத்தகவலை நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## முழங்காவிலில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 7

நேற்று நண்பகல் மன்னார் பூநகரி வீதியில், முழங்காவில் பகுதியில் ஹெலிக்கொப்டரிலிருந்து குண்டு வீசப்பட்டது.

இதனால் அப்பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது.

## சேதமடைந்த நிலையில் ஹெலிக்கொப்டர்

யாழ்ப்பாணம். மார்ச் 7

வவுனியாவில் இரணை இலுப்பைக் குளத்திற்கு அண்மையில் துணுக்காய் வீதியில் மலையன்கட்டு எனும் இடத்தில் சேதமடைந்த நிலையில் ஹெலிக்கொப்டர் ஒன்று காணப்பட்டது.

இந்த ஹெலிக்கொப்டருக்குப் பொருத்துவதற்குத் தேவையான உதிரிப் பாகங்கள் நேற்று கொழும்பிலிருந்து வவுனியா இராணுவ முகாமுக்கு அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகிறது.

பிரஸ்தாப ஹெலிக்கொப்டர் கடந்த சனிக்கிழமை பம்பைமடுவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானதாக இருக்கலாம் எனப் பேசப்படுகிறது.

## வருமான வரிப் பகுதி தஸ்தாவேஜுகள் அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் வருமானவரித் திணைக்களத்திலிருந்து பல முக்கிய தஸ்தாவேஜுகள் நேற்று நண்பகல் அபகரிக்கப்பட்டன.

வருமான வரித் திணைக்கள அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்று ஊழியர்களை அமைதியாக இருக்குமாறு பணித்துவிட்டு, தஸ்தாவேஜுகளை எடுத்துச் சென்றதாம்.

வடபகுதியிலுள்ள வருமானவரி செலுத்தும் பலரின் தனிப்பட்ட கோவைகளும் எடுத்துச் செல்லப்பட்டதாக அறியப்படுகிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோயில்கள் மீது பாகிஸ்தானில் தாக்குதல்

## 30க்கு மேற்பட்டோர் கைது; இவ்வாறு பாக். அரசு அறிவிப்பு

இஸ்லாமாபாத், மார்ச்6

பாகிஸ்தானின்சிந்து மாகாணத்திலுள்ள இந்துக்கோயில்களை முற்றுகையிட்ட வன்முறையாளர்களில் 30 பேருக்கு மேற்பட்டவர்கள் அரசினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாகிஸ்தான் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிந்து மாகாணத்தின் தெற்குப்பகுதி நகரமான ஜாக்கோபபாத்தில் உள்ள 20க்கும் கூடுதலான கோயில்கள் மீது முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்த இந்து எதிர்ப்புக் கலவரங்களில் ஈடுபட்டவர்கள் 'ஜமியட் உலமா இஸ்லாம்' என்ற இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களென நம்பப்படுகிறது.

இந்து ஆலயங்களுக்கு கல்வீசியும் மற்றும் கட்டடத் தகர்ப்பு, கொள்ளை போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டும் பலத்த சேதங்களை உண்டு பண்ணியுள்ளனர்.

பொலீஸார் குழப்பக்காரர்களைக் கலைத்து விட்டதாகவும் எனினும் ஆலயங்களைப் பாதுகாக்க முடியவில்லை எனத் தெரிவித்ததாகவும் அங்கிருந்து வந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிந்து மாகாண இந்துக்கள் வாழும் பகுதிகளில் இன்னும் பதற்றம் நிலவுவதாக தகவலறிந்த வட்டார செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜக்கோபபாட் நகரில் 10,000 பேருக்கு மேற்பட்ட இந்துக்கள் வாழ்கின்றார்கள். பாகிஸ்தான் அடங்கிலும் 10 லட்சத்துக்கு மேற்பட்ட தொகையில் இந்துக்கள் வாழ்கிறார்கள். இது 1982ஆம் ஆண்டு பாகிஸ்தானில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக்கணக்கெடுப்பின்படியாகும்.

இந்தக் கலவரங்கள் தொடர்பாக எந்தவித செய்திகளையும் வெளியிட வேண்டாம் என பாகிஸ்தான் அரசு தடைவிதித்துள்ளதாக அங்கிருந்த வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் இந்துக்கோயில் ஒன்று தொடர்பான இந்திய நீதி மன்றத் தீர்ப்பே இந்த எதிர்ப்புக்கு காரணமெனக் கூறப்படுகிறது.

## 'சிறை' அனுபவத்தை பகர்கிறார் பிரசன்னா

"தாம்பத்யம் ஒரு சங்கீதம்", "புத்திசாலிப் பைத்தியங்கள்" போன்ற படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் பிரசன்னா.

"சிறை" படத்தில் குருக்களாகத்தோன்றி எல்லோரது இதயங்களிலும் குடிபுகுந்துவிட்டார் இவர்.

அவர் தமது "சிறை" படத்தின் அனுபவங்களைக் கூறுகிறார்:

"சிறை"யில் குருக்கள் வேடம் போடுவதற்கு முன்பு "மேக்கப் டெஸ்ட்" எடுக்கச் சொன்னார் சக்தி.

சில படங்களில் கதாநாயகனாக நடித்த எனக்கு மேக்கப் டெஸ்டா? என்று எண்ணி இருந்தாலும் சக்தியின் முன்யோசனையில் ஓர் அர்த்தம் இருக்கும் என்றே உணர்ந்தேன்.

ஆனந்த விகடனில் 'சிறை' கதையைப் படித்தபோது மனதைப் பறி கொடுத்திருந்த நான், குமுதத்தில் சக்தி எழுதிவந்த தொடர் கட்டுரைகளைப் படித்தபோது அவரது திறமை மீது நம்பிக்கை கொண்டேன்.

"உண்மைகள்" படத்தைப் பார்த்திருந்த நான் உண்மையில் 'சிறை'யில் புகழ்பெறுவேன் என்று எண்ணினேன் அது உண்மை ஆயிற்று.

'சிறை'யில் நடிக்கும் போது ஏதேனும் குறை இருந்தால்கூட, எல்லோரின் முன்பும் அதனைச் சுட்டிக் காட்டாமல் காதோடு வந்து சொல்லும் சக்தியின் மனிதாபிமானம் என்னைக் கவர்ந்தது.

எத்தனையோ பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்று இருக்கும் லட்சுமி, 'சிறை'யில் நான் நடித்தபோது சின்னச் சின்ன மாற்றங்களைக் கூட முழு ஒத்துழைப்புடன் சொல்லித் தந்ததை நன்றியோடு நினைத்துக் கொள்கிறேன்.

அதற்கு முன் படங்களில் நடித்த போது இல்லாத தெம்பும் திருப்தியும் எனக்கு "சிறை"யில் ஏற்பட்டது என்கிறார் பிரசன்னா.

தினசரி சினிமா

## நெதர்லாந்து நிதி உதவி

புதுடில்லி, மார்ச்.6

பாரதத்துக்கு நெதர்லாந்து 80 கோடி ரூபா நிதி உதவி வழங்கும்.

பாரத தரைப் போக்குவரத்து மற்றும் நீர் வழங்கல் போன்ற வேலைத் திட்டங்களுக்காக இந்த நிதி உதவி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காங்கிரஸுக்கு றேகன் புத்திமதி

வாஷிங்டன், மார்ச் 6

நிக்கராகுவா அரசுக்கெதிரான கலவரத்திலீடுபட்டிருப்போருக்கு இராணுவ மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி றேகன் அமெரிக்க காங்கிரஸுக்கு அழுத்திக் கூறியுள்ளார்.

10 கோடி டாலர்களை இதற்கு உடனடியாக ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார் றேகன்.

காங்கிரஸ் இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் மத்திய அமெரிக்காவில் கம்யூனிச செல்வாக்கு வளர்ச்சியடைய ஒத்துழைத்த குற்றத்தைச் செய் தவர்களாகவோம் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காங்கிரஸ் கடந்த 1984 ஆம் ஆண்டு நிக்கராகுவாவுக்கு ஒதுக்கும் பணத்தை நிறுத்திக் கொண்டுள்ளது.

## பதவி அதிகாரங்களை கைவிடத் தயாராயில்லை

### பிரான்ஸ் ஜனாதிபதி கூறுகிறார்

பாரிஸ், மார்ச். 6

பதவியை விடுவேனே ஒழிய, பதவிக்குரிய அதிகாரங்களைக் கைவிட நான் தயாராக இல்லை.

இப்படி பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கிஸ் மித்தரண்ட் டெலிவிஷன் பேட்டி ஒன்றில் சொன்னார்.

மார்ச் 16 ஆம் திகதி பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னோடியாக நடந்த தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டமாக டெலிவிஷன் பேட்டி இடம் பெற்றது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் அரசாங்கத்திடம் இருக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கைகள் குறித்தே ஜனாதிபதி மித்தரண்ட் மேற்கண்டவாறு சொன்னார்.

## வெளி உலகில்

சம்பளப் பட்டியலில்

## சினிமா நடிகரும் உலகத் தலைவர்களும்

### மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு

நியூயோர்க், மார்ச், 6

'ரம்போ' திகில் படக் கதாநாயகனான சில்வெஸ்டர் ஸ்டலோன் ஒருபடத்தில் பெறும் பணத்தைப் பெற சீனத் தலைவர் டெங் ஷியோபிங் 6,000 ஆண்டுகள் வேலை செய்ய வேண்டுமாம்.

இப்படி மக்கள் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரம்போ, ரொக்கி படங்களில் நடித்துப் புகழ் பெற்ற சில்வெஸ்டர் ஸ்டலோன் ஒரு படத்துக்கு 1 கோடி 20 லட்சம் டாலர்கள் பெறுகிறார்கள்.

இது சீனத்தலைவர் பெறும் சம்பளத்திலும் பார்க்க 6,000 மடங்கு அதிகமாகும்.

அமெரிக்க அதிபர் றேகன் பெறும் சம்பளத்திலும் பார்க்க 60 மடங்கு அதிகமாக 'ரம்போ' கதாநாயகன் பெறுகின்றார்.

றேகனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் டாலர்கள் தான் சம்பளமாக வழங்கப்படுகிறது.

கியூபாத் தலைவர் பிடல் காஸ்ட்ரோவுக்கு ஆண்டுக்கு 9,600 டாலர்களும் சோவியத் தலைவர் கோர்பச்சேவுக்கு 18,700 டாலர்களும் சம்பளமாக வழங்கப்படுகின்றன.

## றங்கூனில் தீ விபத்து

புதுடில்லி, மார்ச். 6

றங்கூனில் ஏற்பட்ட தீ விபத்தினால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

18 மக்கள் வீடிழந்து அகதிகளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல பெரிய கட்டடங்களும் டகோபாக்களும் பலத்த சேதத்துக்குள்ளாயின.

மூங்கில் வீடோன்றில் ஏற்பட்ட தீயே பெரிய அளவில் மூண்டு இந்தச் சேதங்களை உண்டாக்கியதாகக் கூறப்படுகிறது.

பலகோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

## மாநிலம் - மாவட்டம் உள்ளூர்

செல்வச்சந்நிதி கோயிலுக்கு மக்கள் செல்ல முடியாதநிலை

## மத சுதந்திரத்தை பாதிக்கும் இராணுவ முகாமை நீக்குக

### பத்தைமேனி - இடைக்காடு பிரஜைகள் குழு கோருகிறது

யாழ்ப்பாணம், மார்ச்.7

செல்வச் சந்நிதி கோயிலுக்கு அண்மையில் தொண்டமானாறு இராணுவ முகாம் இருப்பதால் இந்து மக்களின் மத சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. இந்த இராணுவ முகாம் உடனடியாக அங்கிருந்து அகற்றப் பட வேண்டும்.

பத்தைமேனி -இடைக்காடு பிரஜைகள் குழு மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி கூட்டம் பிரஜைகள் குழுத்தலைவர் ஆ. ந. இராசேந்திரன் தலைமையில நடைபெற்றது.

இந்து, கிறிஸ்தவப் பிரார்த்தனைகளுடன் கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. போர் விமானங்களிலிருந்து பொது மக்களின் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் குண்டு வீசுவது மிகவும் அநாகரிகமானதும் அநியாயமானதுமான செயலாகும். அப்பாவிப் பிரஜைகளை அடையாளம் காணாமலே ஆகாயத்தில் இருந்து கொல்லும் ஈனச் செயலை உடன் நிறுத்து.

2. அ. ஒவ்வொரு பிரஜைக்கும் தனது ஜீவனோபாயத்திற்காக தான் விரும்பும் தொழிலைச் செய்ய உரிமை உண்டு. இந்த அடிப்படை மனித உரிமையை மறுக்கும் விதத்தில் மீண்டும் அமுல் நடத்தப்படும் கடல் தடைச் சட்டத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். உடனடியாக இச்சட்டத்தை நீக்கி பல்லாயிரக்கணக்கான மீனவர் பட்டினியால் சாகும் நிலையை தடு.

ஆ. மீனவருக்கு உதவி என்ற பெயரில் இப்பொழுது வழங்கும் தொகை அவர்களின் இழப்பை ஈடு செய்யக் கூடியதல்ல. எனவே, இந்து [illegible] தொகையைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா. 1500-க்குக் குறையாத பெறுமதியும் அதற்கு மேற்படும் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ரூபா. 250 —க்குக் குறையாத பெறுமதியுடைய உதவியும் வழங்கப்பட வேண்டும்.

3. செல்வச் சந்நிதி கோயிலில் அண்மையில் தொண்டமானாறு இராணுவ முகாம் அமைந்திருப்பதாலும் அடிக்கடி அங்கிருந்து பீரங்கி வேட்டுக்களும், துப்பாக்கி வேட்டுக்களும் சூடுகளும் தீர்க்கப்படுவதாலும் இந்துக்கள் தங்கள் சமயக் கடமைகளை கடந்த இரு வருடங்களாக நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளனர்.

ஆலயத்திற்குச் செல்பவர்களும் ஆயுதப் படையினரின் அத்துமீறல்களால் அச்சத்துடனேயே தமது வணக்கத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, இந்துக்களின் மத சுதந்திரத்தைப் பாதிக்கும் இந்த இராணுவ முகாமை உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு வேண்டுகிறோம்.

## பிள்ளைகளை பாடசாலை அனுப்புவதோடு பெற்றோர் கடமை முடிந்து விடாது

மண்டைதீவு, மார்ச்.7

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதோடு தங்கள் கடமை முடிந்து விட்டது என்று நினைக்கக் கூடாது. அங்கு என்ன நடக்கின்றது? பிள்ளைகள் கல்வி கற்கின்றார்களா என்று அவதானிக்க வேண்டும். பாடசாலைகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதில் பெற்றோர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கூட்டம் ஒன்றிற்கு தலைமை வகித்துப்பேசிய வித்தியாலய அதிபர். திரு. [illegible] மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் எந்த ஒரு அரசினர் பாடசாலையும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு இல்லாமல் அபிவிருத்தியடையமுடியாது.

பாடசாலைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு முக்கியமானதாகும்.

ஒரு கிராமத்திலுள்ள பொது நிலையங்களில் பாடசாலை முதன்மையாக விளங்குகின்றது.

அக்கிராம மக்களின் அறியாமை என்னும் இருளைப் போக்கி, பகுத்தறிவு என்னும் ஒளியை கொடுப்பவை பாடசாலைகளாகும்.

இப்படி அவர் கூறினார்.

## பகத் பேச்சு பற்றி இவர்கள் கருத்து

கொழும்பு, மார்ச்.7

இந்திய வெளிநாட்டமைச்சர் பகத் இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய பேச்சுக் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது.

விவசாய அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா பேசுகையில்;

இந்திய வெளிநாட்டு அமைச்சர் பொறுப்புள்ளவர் போன்று பேசவில்லை"— என்று சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம பேசுகையில்;

"இந்தியாவும் இலங்கையும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு இலங்கை, இந்திய ஒத்துழைப்பைப் பயன்படுத்த வேண்டும்" என்று சொன்னார்.

## மக்கள் முகம்



### நிர்வாகிகள்

விசுவமடு, மார்ச் 7

முரசுமோட்டை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் ஊலியான் கிராம சேவையாளர் எஸ். இராசேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர்- க நடராசா, இணைத்தலைவர்கள்- கா. கணபதிப்பிள்ளை, பேர்னாட் கீத பொன் கலன், செயலாளர் செ. சிவலோகநாதன், உதவிச் செயலாளர் க. மகேந்திரநாதன் பொருளாளர்-வ ஸ்ரீ சத்தியானந்தம், நிர்வாக உறுப்பினர்கள்- பொ. கணபதிப்பிள்ளை, நா. பரராசசிங்கம், சு அமிர்தலிங்கம், சி. சதாசிவம், க. வீரசிங்கம், வி. கே. பரம்சோதி, சி. சிவராசா.

கணக்குப் பரிசோதகராக க.தெய்வேந்திரமும் போஷகராக திரு வ. பயஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பாட்டு, பேச்சுப் போட்டி பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், மார்ச். 7

ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு திருநெல்வேலியிலுள்ள ராமகிருஷ்ணாலயம் நடத்திய பாட்டு, பேச்சுப் போட்டிகளில் பின்வரும் மாணவர்கள் பரிசு பெற்றுள்ளனர்.

பரிசளிப்பு விழா நாளை 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி அளவில் திருநெல்வேலியிலுள்ள கலாமன்றத்தில் நடைபெறும். பரிசில்களை சுவாமி சித்ரூபானந்தா வழங்குவார்.

பாட்டுப் போட்டி

கீழ்ப்பிரிவு

1ம் இடம் செல்வி. இ. காயத்ரீ யா. இ. த. க. பாடசாலை 2ம் இடம் செல்வி சி. காஞ்சனா யா. இ. த. க. பாடசாலை 3ம் இடம் செல்வி பா. சுதர்ஷினி யா.இ.ம.ஆரம்பப் பாடசாலை.

மேற்பிரிவு

1ம் இடம் செல்வி. க. சாந்தி யா.ம.மு. வித்தியாலயம் 2ம் இடம் செல்வி. ஆ. தேவராணி யா.மு.ம. வித்தியாலயம் 3ம் இடம் செல்வி. மு. வானதி யா.செ.இ. கல்லூரி.

அதிமேற்பிரிவு

1ம் இடம் திருமதி இந்திராணி சிவசோதிநாதன்

ஆறுதல்பரிசு

கீழ்ப்பிரிவு

செல்வி இ.மைத்ரீ யா. இ.த.க.பாடசாலை செல்வி க. அங்கயற்செல்வி யா. சென்ற் ஜோன் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலை செல்வி [illegible]

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இருவருக்கு மரண தண்டனை

கிளிநொச்சி, மார்ச் 7

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியருகே ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மரணதண்டனை வழங்கப்பட்டது.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தைச் சேர்ந்தவரும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியருமான நீதிராசா மோகனதாஸ், வட்டக்கச்சியைச் சேர்ந்த மார்க்கண்டு கெங்காதேவி ஆகிய இருவருமே மரணதண்டனைக்குள்ளானவர்கள்.

இவர்கள் இருவரது சடலங்களும் பிரதான கண்டி வீதியில் 155 ஆம் கட்டை என்னுமிடத்தில் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது.

இவர்களுக்கு அருகே இறந்தவர்களுக்கும் இராணுவ முகாமிற்கும் தொடர்புகள் உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு விடுதலைப் புலிகள் என எழுதப்பட்ட அட்டை போடப்பட்டிருந்தது.

இதேவேளை கிளிநொச்சியில் இறுதி எச்சரிக்கை எனக் கூறிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பொலீஸ் இராணுவ கூட்டு முகாமுடன் தொடர்பு வைத்துள்ளது தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச் செல்வோர் தண்டிக்கப்படுவர்- விடுதலைப் புலிகள் என அந்தச் சுவரொட்டியில் குறிக்கப்பட்டுள்ளது.


A/L 86

நீர்நிலையியல்

ஆரம்பம்: 10-3-86

சனி,ஞாயிறு தவிர்ந்த நாட்களில்

காலை 7 30இல் இருந்து 8.45 வரை

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்-



ஆள் தேவை

எமது கிறசர் ஸ்தாபனத்துக்கு கணக்கு எழுதுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் ஒரு ஆள் உடனே தேவை தங்கும் இடவசதி உண்டு. நேரில் வரவும்.

சிவபாதம் கிறசர்

வயாவிளான் றோட் அச்சுவேலி.


### ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் வல்லிபுரம் நடராசா

மலர்வு: 20-3-1918 உதிர்வு: 16-2-1985

திதி: 07-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை உயரவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! மின்னாமல், முழங்காமல் சொல்லொணாத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்தீர்களோ! நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் உறைந்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

சொந்தமில்லாத பொருள்களில் ஆசை கொள்வதிலும் பார்க்க சொந்தப் பொருள்களில் நாம் ஆசை கொள்ள வேண்டும். இதுதான் புத்திசாலித்தனமான காரியம்.
-- ஹென்றி வான் --


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, பிள்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

07-03-86 த. பெ. 23


## மனித உரிமை ஆணைக்குழு ஒரு "ஷொக் அப்சோபரா?"

அடிப்படை மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழு. இப்படி ஓர் அமைப்பை ஸ்தாபிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை மனித உரிமைகளை ஒவ்வொரு பிரஜையும் அனுபவிக்க உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது அந்த உத்தரவாதம் செயலளவில் – நடைமுறையில் மக்களுக்குப் பலன் தருகிறதா என்பதனைக் கண்காணிக்க எந்த அமைப்பும் இல்லை.

மனித உரிமை மீறப்படுவதாக தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர மட்டுமே வசதி உண்டு.. நீதிமன்றத்துக்குப் போகப் பணவசதி இல்லாதவர்கள் அல்லது அதனை விரும்பாதவர்களுக்கு நியாயம் கிடைக்க வழியில்லை.

இலங்கை மன்றக் கல்லூரியின் நிர்வாகத்தில் மனித உரிமைகள் பிரிவு ஒன்று இயங்குகிறது. ஆனால் அதற்கு மனித உரிமை மீறப்படுவதாகச் செய்யப்படும் புகார்களை விசாரிக்கவோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவோ சட்ட வலு எதுவும் இல்லை.

ஆகையால் மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழு ஒன்று நிறுவப்படுவதால் தீங்கு எதுவுமில்லை. ஆனால் அது சரிவர இயங்கவும், மக்களுக்கு நீதி கிடைக்கவும் அதற்குப் பூரணமான அதிகாரங்கள் வழங்குவது முக்கியம்.

அரசாங்கத்தின் சட்ட வரம்பு எதற்கும் கட்டுப்படாது, தன்னிச்சையாக இயங்கி, விசாரணைகளைச் சுதந்திரமாக நடத்தி. பாரபட்சமில்லாத முடிவுகளை வெளிக்கொணரும் உரிமை அந்த ஆணைக்குழுவுக்கு இருக்க வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களையும் சம அளவில் பிரதிநிதித்துவப் படுத்தும் விதத்தில் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும். சர்வதேச மனித உரிமை இயக்கங்களில் அங்கம் வகிக்கும் பிரசித்தி வாய்ந்த வெளிநாட்டவர்களும் அரைக்கரைவாசி ஆணைக்குழுவில் இடம் பெற வேண்டும்.

அதுமட்டுமன்றி உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகளை, இத்துறையில் அனுபவம் உள்ள சர்வதேச அமைப்பு ஒன்றே நியமிக்க வகை செய்வதும் அவசியம்.

அப்போதுதான் அது மனிதஉரிமை மீறல்களைச் சரிவர விசாரித்து நிவாரணம் வழங்கக் கூடியதாக இருக்கும்.

கடந்த 1978 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர்களின் சகல அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. ஏராளமான தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற போர்வைக்குள் கண்டபடி கைது செய்யப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் வருகின்றார்கள்.

சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற நிறுவனங்கள் அவைகுறித்து அறிக்கை வெளியிட்ட போதெல்லாம், அந்த அறிக்கைகள் தவறு என்று அரசாங்கம் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இராணுவ முகாம்களுக்குப் போய் சிலகாலம் தடுப்புக் காவலில் இருந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களே, அடிப்படை உரிமைகள் எவ்விதம் பறிக்கப்பட்டன என்பதை எடுத்துச் சொல்லப் போதுமானவர்கள். நீண்டகாலம் தடுப்புக்காவலில் இருப்வர்களின் கதை வேறு

இவர்கள் எல்லோரும் தமக்கு நடந்த இம்சைகளைப் பயமின்றி எடுத்துக்கூற வகை செய்யப்படவேண்டும். பாதிக்கப்படுவோர் விசாரணைக்குழுவுக்கு புகார் செய்தால் அவர்கள் பழிவாங்கப்படாமல் பார்த்துக்கொள்வதும் விசாரணைக்குழுவின் பொறுப்பாக இருக்கவேண்டும்.

அரசமைப்பில் உள்ள அடிப்படை மனித உரிமை உத்தரவாதம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. அதே கதி இந்த ஆணைக்குழுவுக்கும் ஏற்படக்கூடாது.

நமது நாட்டிலும் அடிப்படை உரிமை மீறலை விசாரிக்க ஒரு குழு உண்டு என்று வெளியே காட்டுவதற்காக ஒன்றை அமைப்பதில் எவருக்கும் எந்தப்பயனும் ஏற்படாது.

அடிப்படை மனித உரிமைகளை மீறும் சட்டங்களை இயற்றுவதைத் தடுக்கும் அதிகாரமும் இந்தக் குழுவுக்கு வழங்கினால் மேலும் நல்ல பயன் கிடைக்கும்.

எது எப்படித்தான் இருந்தாலும் இலங்கை அரசு, மனித உரிமை ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அவசர அவசரமாக நடவடிக்கை எடுத்து வருவது காரியத்தோடுதான் என நாம் எண்ணுகிறோம்.

இலங்கைத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை சர்வதேச மனித உரிமை கமிஷனுக்கு எடுத்துச் செல்ல இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் பகத் தெரிவித்திருந்தார்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுமுன்னர் தமிழர் படுகொலை செய்யப்படுவது குறித்து சுதந்திரமான விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படுவது அவசியம் என்றும் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவை எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டையும் முற்றுப்புள்ளியும் வைக்கும் ஒரு 'ஷொக் அப்சோபர்'' ஆகத்தான் மனித உரிமை ஆணைக்குழு நியமிக்கப்படுகிறது என்று கருதலாம் அல்லவா?

# திருவும், கல்வியும், சீரும் புரிந்திடும் சிவராத்திரி-நாளை

## ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனின் மெய்யார் புகழ் விளங்கும் புண்ணியத் திருநாள்

மனிதனை மனிதனாக வாழச்செய்வது சமயம். அழியும் உலகில் அழியாத் தன்மை அடைந்து வாழ வழிகாட்டுவது சமயம். சிறப்பாகச் சொன்னால் துன்பம் கலந்த உலகவாழ்வை இன்ப வாழ்வாக மலரச் செய்வது சமயம்.

அந்தச் சமயத்திலே வரும் நெறிமுறைகள் நம் வாழ்வை வளம்படுத்துவதாகும். சமய வாழ்க்கையே பரிபூரணத்துவமான வாழ்க்கையாகும். விரதம் அனுட்டிப்பவனுடைய முகத்திலே தெய்வீகம் ஒளி வீசும். சாந்தம் நிலவும். சிந்தையிலே சிவம் மணக்கும். செய்கையிலே அருள் மணக்கும். சிவநெறி சிந்தை தழுவியநெறி. அதனால் சிவராத்திரி விரதமும் ஒரு சிறப்பம்சத்தைத் தன்னகத்தே கொண்டஒரு சிவ விரதமாகும்.

இந்தச் சிவராத்திரி விரத மகிமை பற்றியும் அது எவ்வாறு எழுந்தது என்பது பற்றியும் சற்று நோக்குவாம்.

சர்வலோக நாயகராகிய சர்வேஸ்வரன் ஆன்மாக்கள் மேல் கொண்டுள்ள அளவிலாக் கருணையினால் படைத்தல், காத்தல், அளித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் புரிகின்றார். அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டே கொண்ட தோற்றமாகும்.

சிவபெருமானிடத்திலே படைத்தல், காத்தலாகிய இரண்டையும் முறையே புரிபவர்களாகிய பிரம்மாவும் விஷ்ணுவும் தமது ஆணவத்தின் முனைப்பினால், அகங்கார மேலீட்டினால் தமக்குள் ஒருவரோடொருவர் விரோதமும் குரோதமும் கொண்டு, நானே பரப்பிரும்மம், நானே பரப்பிரும்மம்' என்றுவாதாடி முரண்பாடுற்றனர். இதன்பயனாக இந்த இருவரிடையேயும் போர் மூண்டது.

சிவபிரானானவர் அவர்களுக்கு அறிவு புகட்டும்படியாக ஒரு ஜோதிப் பிழம்பாகக் காட்சியளித்தது. 'இதன் அடியையும் முடியையும் தேடிக் காண்பவர்களே பெரியவர்கள்' என்று ஒளிவடிவாக நின்றார்.

அறிவு எப்போதும் மேலோங்கியே இருக்கும். அறிவுக்கு அதிபதி சரஸ்வதி. அவளுக்கு அதிபதி பிரம்மா அவர் அன்னப் பட்சியின் உருக்கொண்டு வானத்தின்மீதெழுந்து முடியைத் தேடி மேலே சென்றார்.

செல்வம் அதிகமாகப் புதையலாகவே பாதுகாக்கப்படும். அதுவும் ஆழமாகவே இருக்கும், செல்வத்துக்கு அதிபதி திருமகள் அவளுக்குத் தலைவன் ஸ்ரீமகாவிஷ்ணு. அவர் பன்றியுருக் கொண்டு பூமியைத் துளைத்துக்கொண்டு அடியைத்தேடிக் கீழே சென்றார்.

### இளஞ் சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்

ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியாய் நிற்கும் இறைவனை யாரே அறியவல்லார். தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய், வேதங்களை ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாய் விளங்கும் அந்தப் பரம்பொருளின் அடியையும் முடியையும் அவர்களாற் காணமுடியவில்லை.

அடி முடி தேடிக் காணாத அவ்விருவரும் அரனைப் போற்றித் துதித்து வணங்கி நின்றனர். அவர்களது ஆணவமும் அகங்காரமும் அடங்கி ஒடுங்கிவிட்டது. சோதியாய்நின்ற சொற்றுணை வேதியன் சோதி வானவனும் நிலைவிடுத்து ஒருமலையாகக் காட்சி கொடுத்தார்.

அந்த மலை சிவலிங்க ரூபமாகவே எல்லோராலும் வணங்கும்படி அமைந்தது. அதுவேதிருவண்ணாமலையாகும். இங்ஙனம் வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழச் சோதிப்பிழம்பாய் நின்ற தினமே சிவராத்திரியாகும். இத்தகைய மேன்மை பொருந்திய மகாசிவராத்திரி சிவவிரதங்களில் தலைசிறந்ததாகும். இதுபற்றிய ஒரு வரலாறுண்டு. அதுபற்றிச் சிறிதுநோக்குவாம்.

முற்காலத்திலே முனிவர்கள் பலர் தேவர்களிடம் போய், 'நாங்கள்பூவுலகத்திலே தவம் செய்வதற்கு ஒரு தலத்தை அருளவேண்டும்' என்று விண்ணப்பிக்க, பிரமதேவரானவர் 'முனிவர்காள்! இந்தத் தருப்பை எங்கு போய்நின்று ஒய்கின்றதோ அங்கு தவம் செய்க' என்று கூறித் தருப்பையை ஏவ அது தங்கிநின்ற இடத்திலே தவத்தை மேற்கொண்டனர். அச்சமயம் அங்கு சூதமகாமுனிவர் வர அவரைப் பணிந்த அம்முனிவர்கள், 'சுவாமி! எளிதில் அனுட்டிக்கத் தக்க தாயும் நற்கதிப்பேறு அருளுவதாயும் உள்ள ஒரு சிவவிரதத்தை எமக்கு உரைத்தருளவேண்டும்' என்றனர்.

அதகேட்ட அவர், 'நன்று கேட்டீர்கள். இதுவும் முற்றவப்பயனே. விரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதம். இதன் மகிமை அளவிட்டுச் சொல்லமுடியாதது. மற்றைய பலவிரதங்களை அனுட்டித்தாலும் அந்தணர்களுக்குத் தானம் செய்தாலும் அநேக யாகங்களைச் செய்தாலும் கங்கையில் மூழ்கினாலும் சிவராத்திரி விரதத்தாலடையும் பயனை அடையமாட்டார்கள்.

பஞ்சமா பாதகங்களைச் செய்தாலும் சிவராத்திரி

ஞானக்கதிர்

விரதத்தை அனுட்டித்தால் அது கதிரவனைக் கண்ட காரிருள்போல விலகும்.

மாசிமாதத்தில் அபரபட்ச சதுர்த்தசித் தினத்தில் அர்த்தராத்திரியிலே நிற்கும் விசேட காலம் லிங்கோற்பவ காலம். சதுர்த்தசி சிவரூபமும், திரயோதசி சக்திரூபமும் ஆதலால் திரயோதசி தொட்ட சதுர்த்தசி முக்கியமாம்.

சிவராத்திரி பலவகைப்படும். மாகசிவராத்திரி யோகசிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்க சிவராத்திரி என்பன இதுவாகும்.

சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர் முதல் நாள் ஒரு பொழுது உண்டு, போகம் வெறுத்து, நித்திரை செய்து, விடியற்காலத்திலே எழுந்து காலைக்கடன் முடித்துச் சந்தியாவந்தனம் செய்து கோயிலுக்குப் போய் இறைவனை இறைஞ்சுதல் வேண்டும். பின்பு நான்கு ஜாமமும் சிவத்தியானம் மேற்கொண்டு சிவசிந்தனையோடு வழிபாடியற்றுதல் வேண்டும்.


விசேஷமாக முதலாஞ் சாமத்திற் பஞ்ச கௌவியத்தாலும் இரண்டாஞ் சாமத்திற் பஞ்சாமிர்தத்தாலும் மூன்றுஞ் சாமத்திற் தேனாலும் ,நான்காம் சாமத்திற் கருப்பஞ் சாற்றினாலும் இறைவனுக்கு அபிஷேகஞ் செய்தல்வேண்டும். முடிந்தால் முதலாம் சாமத்தில் வில்வம் அல்லது தாமரைப் பூவினாலும், இரண்டாஞ் சாமத்தில் தாமரைப்பூ அல்லது துளசியினாலும் மூன்றுஞ் சாமத்தில் செண்பகப் பூவினாலும், நான்காஞ் சாமத்தில் நந்தியாவர்த்தம் பூவினாலும் அர்ச்சித்து ஒவ்வொரு சாமத்திலும் வெவ்வேறு நிவேதனம் வைத்து வழிபாடியற்றலாம்.

சிவராத்திரி தினத்தில் கண் உறங்காது விழித்திருந்து இறைவனைத் தியானம் செய்தால் குபேர சம்பத்தும் இந்திர பதவியும் கிடைக்கப்பெறுவர்.

இயலாதவர்கள் நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை அதாவது லிங்கோற்பவ காலம்வரையாவது கண்விழித்திருந்து சிவசிந்தனையுடன் திருமுறைப் பாராயணம் செய்யவேண்டும்.

இத்தினத்தில் வேறு பொழுது போக்குகள் செய்து கண் விழிப்பது மகாபாவமாகும். சில பேர் சினிமா, சொக்கட்டான், தாயம் போன்றவற்றில் நேரத்தைச்செலவிட்டுக் கண்விழிப்பர். அதனால் எதுவித பயனும் இல்லை.

சிவராத்திரியிற் சிவபெருமான் சிவலிங்கத்திலே சார்நித்தியராயிருந்து திருவருள் பாலிப்பார்.




இவ்விரதத்தை எவன் அனுட்டிக்காதுவிடுவனோ அவன் நரகத்தில் தள்ளப்படுவான் என்றும், எவன் உணவு உண்டு போகம் அனுபவிக்கிறானோ அவன் நாயின் பிறவி எடுப்பான் என்றும் மூவுலகத்துக்கும் இறைவனாகிய மூவா மருந்தை எவன் பக்தியோடு பூசியாது (சக்தியிருந்தும்) விடுகின்றானோ அவன் ஏழேழ் பிறவியில் கிடந்து உழல்வான் என்றும்கூறப்படுகிறது.

பாவம் தீர்க்க வல்ல ஔடதமான இந்த சிவராத்திரி விரதத்துக்கு இணை வேறெதுவுமில்லை. இவ்விரதம் தப்பாது பலனளிக்கும். தவறாதுபயன் கொடுக்கும் என்பது ஆன்றோர் முடிவு.

ஆகவே சைவமக்களாகிய அனைவரும் இந்தச் சிவராத்திரி விரதத்தைத் தவறாது அனுட்டித்து இறைவனின் திவ்விய கடாட்சத்தைப் பெற்று ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகோலுவார்களாக.

''அவன் அருளாலே அவன்றாள் வணங்கி''.



**பொய்யாமொழி**

குறள்:

துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார் மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு

பொருள்:

யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகுதிப்படுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.

## பாட்டு, பேச்சுப் போட்டி.....

(2 ம் பக்கத் தொடர்ச்சி) பவதாரிணி யா.இ.த.க. பாடசாலை, செல்வி.நா. கோகுலவாணி யா.இ.ம ஆரம்பப்பாடசாலை.

**மேற்பிரிவு**

செல்வன் ஆ ராஜேஷ் கண்ணன் கோ - ராமகிருஷ்ண வித்தியாலயம் செல்வி. ஆ. கமலாம்பிகை யா.மு.ம. வித்தியாலயம்.

**அதிமேற்பிரிவு**

திருமதி. நாகம்மா பாலசிங்கம்.

**பேச்சுப் போட்டி**

**கீழ்ப்பிரிவு பெண்கள்**

1ம் இடம் செல்வி. சி. காஞ்சனா யா இ த.க. பாடசாலை, 2ம் இடம் செல்வி. பா. சுதர்ஷினி யா இ.ம, ஆரம்பப் பாடசாலை 3ம். இடம் செல்வி. இ.மைத்ரீ யா.இ.த.க. பாடசாலை, செல்வி.ச. விஜிதா யா.சுண்டுக்குளி மகளிர் ஆரம்பப்பாடசாலை.

**ஆண்கள்**

1ம் இடம் செல்வன்.சி. நிருத்தன் யா. சென்ற் ஜோன்ஸ் பொஸ்கோ 2ம் இடம் செல்வன்.எஸ் அகிலன் யா. இ. த. க. பாடசாலை, 3ம் இடம் செல்வன்.ஜே.தீபன் அட்லஸ் இன்ஸ்ரிரியூட்.

**மத்தியபிரிவு பெண்கள்**

1ம் இடம் செல்வி.இ. மாலதி சுண்டுக்குளி பெண்கள் மகளிர் கல்லூரி, 2ம் இடம் செல்வி. ஞா.மேரினைஷா யா.இ.த.க.பாடசாலை செல்வி க.வனிதா யா.இ.த.க. பாடசாலை, செல்வி. சு. சித்ரா யா.மு.ம. வித்தியாலயம்.

**ஆண்கள்**

1ம் இடம் செல்வன். கே. கிரிசரன் யா. கொக்குவில் இந்துக் கல்லூரி, 2ம் இடம் செல்வன். இ. ஸ்ரீராகவன் யா.இ.த.க. பாடசாலை, 3ம் இடம் செல்வன். க.சேரலாதன் யா.இ.த.க. பாடசாலை, செல்வன். ஆ. ஜனார்த்தனன் யா.இ.த.க. பாடசாலை.

**மேற்பிரிவு**

1ம் இடம் செல்வி. சி. சுகன்யா யா. கன்னியர் மடம் மகா வித்தியாலயம், 2ம் இடம் செல்வி. பா. பாலகுமாரி யா. கொ. இ. கல்லூரி, 3ம் இடம் செல்வி. செ. தயாநிதி, செல்வி. ஆ. தேவராணி, செல்வி. இ. பத்மஜோஜனி யா.மு.ம. வித்தியாலயம்.

**ஆறுதல்பரிசு பெறுவோர்**

**கீழ்ப்பிரிவு**

செல்வி. இ. காயத்ரீ, செல்வன். வி. ஸ்ரீதரன், செல்வன். வ. சுதர்ஸன் யா.இ. த.க. பாடசாலை.

**மத்தியபிரிவு**

செல்வி. பா. வாசுகி கோண்டாவில் ராமகிருஷ்ண வித்தியாலயம், செல்வன். சி. சந்திரகாந்தன் யா. இ. த. க. பாடசாலை.

**மேற்பிரிவு**

செல்வன். பா. பால[illegible] யா. [illegible]. இ. கல்லூரி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கீரிமலையில் எழுந்தருளி அடியார் துன்பம் களையும் நகுலேஸ்வரர்

## இன்று தேர் வீதி உலா

கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரஆலய மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்றுவருகிறது நாளை தேர்த் திருவிழா

அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

இலங்கையிலே பிரசித்தி பெற்று விளங்கும் சிவாலயங்களில் அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர ஆலயமும் ஒன்றாகும். ஈழத்தின் வடபால் கடலால் சூழப்பெற்று, சிறிது மலைப்பாங்கான பிரதேசத்தில் நகுலேஸ்வர ஆலயம் கவினுறக் காட்சியளிக்கிறது.

தொன்மையும், வரலாற்றுச் சிறப்பும், புராணவரலாறும் ஒருங்கே அமைந்து விளங்குவது ஆலயத்தின் மகிமையை ஆணித்தரமாக எடுத்து விளக்க உதவுகிறது. அங்கு காணப்படும் அழகும் அமைதியும் அடியார்கள் மன ஒருமைப்பாடுடன் இறைவனை வழிபட வழிவகுக்கின்றன.

இலங்கையின் கிழக்குத் திசையில் திருக்கோணேஸ்வரமும், தென்பால் சந்திரசேகரேச்சுரன் ஆலயமும் போன்றே இங்கிலேயும் வடபால் நகுலேச்சுர ஆலயமும் அமைந்துள்ளன என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

இவ்வாலயத்தின் வரலாறு விஜயன் வருகையுடன் ஆரம்பமாகிறது என ஏடுகள் செப்புகின்றன. அன்று முதல் இன்று வரை அடியார்கள் பலர் தலயாத்திரையை மேற்கொண்டு நகுலேஸ்வரப் பெருமான் அருள்பெற்றுள்ளனர்.

ஓர் ஆலயத்திற்குச் சிறப்பைத் தருவன மூர்த்தி, தல, தீர்த்த விசேடமாகும்.

ஜமதக்கினி முனிவர் சாபத்துக்காளாகி கீரிமுகம் பெற்றார். தனது நிலையை எண்ணி வருந்திய முனிவர் பிருகு முனிவரிடம் தனக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கூறிப் பணிந்து நின்றார். அப்பொழுது பிருகு முனிவர் இலங்கையின் வடபால் திருத்தம்பலேச்சுரத்தின் அருகே கற்பாறைகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் நீரூற்று புனிதமானதென்றும், அதில் நீராடினால் பாவம் தீரும் என்று கூறினார்.

ஜமதக்கினி முனிவர் நகுலேஸ்வரத்தில் பலகாலம் தங்கி, புனித தீர்த்தத்தில் தினமும் நீராடி அங்கு கோயில் கொண்ட பெருமானை மெய்யன்புடன் வழிபட்டு சாபவிமோசனம் பெற்றார்.

அதன் பின்னர் ஆலயம் நகுலேஸ்வரம் என்றும், இறைவன் நகுலேஸ்வரப் பெருமான் எனவும் வழங்கப்படலாயிற்று.

தீராநோய் தீர்த்தருள வல்ல பெருமானின் பெருங்கருணையைக் கேள்விப்பட்ட பக்தர் [illegible] அங்கு தலயாத்திரை மேற்கொண்டு வழிபட்ட செய்தி புராணங்களி

-மதி-

லும், வரலாற்று நூல்களிலும் கூறப்பட்டுள்ளன.

சோழவம்சத்தைச் சேர்ந்த மாருதப்புரவீகவல்லி என்ற இளவரசி குன்ம நோயாலும் குஷ்ட நோயாலும் பீடிக்கப்பட்ட நிலையில் குதிரை முகமுடைய வராகவும் இருந்தார். மாருதப்புரவீகவல்லி ஆலயம் சென்று நகுலேஸ்வரப் பெருமான் அருள் பெற்று தனது நோய் நீங்க அழகிய வதனத்துடன் விளங்கினார்.

நிடதநாட்டரசன் நளமகாராஜன் புட்கரனோடு சூதாடி நாடுநகரிழந்து வனவாசம் செய்த பொழுது கலியினால் பீடிக்கப்பட்டான். எனவே தனது துன்பம் நீங்க தலயாத்திரை செய்து இறுதியாக நகுலேஸ்வரத்தின் பெருமையைக் கேள்விப்பட்டு அங்கு சென்று இறையருள் பெற்று தனது துன்பம் நீங்கப் பெற்றான்.

மேலும் அர்ச்சுனனும் தீர்த்தயாத்திரையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்டோருக்கு சேவாச்சிரமத்தில் நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச். 7

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஜயந்தியை ஒட்டி பருத்தித்துறையில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

5. 2. 86 இல் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 12 இல் காலையில் இருந்து மங்கள ஆரத்தி, விசேட பூசை முதலியன இடம்பெறும். மாலை 5. 30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண சரிதத்தில் இருந்து சில பகுதிகள் வாசிக்கப்படும்.

**குளிர்த்தி விழா**

யாழ்ப்பாணம், மார்ச். 7

வடலியடைப்பு ஐயனார் ஆலயத்தின் குளிர்த்தி விழா இம்முறை சிறப்பாக நடத்தப்படுகிறது.

திரு. மு. கந்தசாமி தலைமையில் குளிர்த்தி அலுவல்களைக் கவனிக்க விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

G.C.E. O|L
Science: Mr. Bond & Mr. J. R. குரு
Maths: Mr. V. T. ராஜேந்திரா
Social Studies: Mr. சண்முகராஜா
Tamil: Mr. சரவணன்
English: Mr. சண்
Hygiene: Mr. இலங்கராஜா
Commerce: Mr. தவ
BOND INSTITUTION
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

07. 03. 1986

'Conversational English'
(Spoken English)
Mr. சண் B.A. Hons.
திங்கள் - புதன்: 2.15
ஆரம்பம்: 14-03-1986
BOND INSTITUTION
101/10, STANLEY ROAD, JAFFNA.

# நயினதீவில் தொடர்ந்து பீதி

நல்லூர், மார்ச் 7
கடந்த திங்கள் நடைபெற்ற அனர்த்தங்களினால் கலங்கிப் போயிருக்கும் நயினதீவு இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. தொடர்ந்து பீதி நிலவுகிறது.

கடந்த திங்கட்கிழமை நயினதீவில் நடந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

இருவரது சடலங்கள் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதில் ஒருவரது சடலம் ரயர் போட்டு கொளுத்தப்பட்டிருப்பதாகவும் மற்றையவரின் சடலத்தின் முண்டப் பகுதி மட்டும் கடல் கரையருகே அரைகுறையாக எரிந்த நிலையில் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

மற்றொருவரது சடலம் நயினதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு அருகேயுள்ள கடையொன்றினுள் எலும்புக்கூடாக கிடப்பதாகவும் அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கின்றனர்.

இவரது சடலத்தை மீட்டுவர செல்வதற்கு மக்கள் பீதியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

காணாமல்போன அழகராசாவின் எலும்புக்கூடே இது என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் செல்லும் பெண்களுடன் முகாமிலிருந்து குளிக்க வரும் சிருடையினர் சேஷ்டை விடுவதாகவும் புகார் கூறப்படுகிறது.

வீடுகளில் இருந்து வெளியேறி நயினதீவு மகா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு போதியளவு உணவுப்பொருள்கள் கிடைக்கவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பகுதி மக்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்த அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்கள் நேற்று வரை அங்கு போய்ச்சேரவில்லை எனவும் கூறப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான படகு நேற்றும் சேவையில் ஈடுபடவில்லை.

எரி பொருள்களுக்கும் இப் பகுதிகளில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

இதனால் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

பாடசாலைகள் எதுவும் கடந்த தினங்களாக இயங்காதபடியால் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் பெரும்பாலான மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தனியாரின் மூன்றுபடகுகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதன்மூலம் ஓரளவு பொதுமக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்க வெளியேறுகின்றனர்.

நயினதீவு பயங்கர சம்பவங்களினால் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான படகுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்றும்—

வீடுகளுக்கும் கடைகளுக்கும் ஏற்பட்ட சேதம் மூன்று லட்சம் ரூபா என்றும் உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு ஏற்பட்ட சேதம் 20 லட்சம் ரூபா என்றும் உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நயினதீவில் சிறு ஒழுங்கைகள் ஊடாக அங்கிருக்கும் ஆயுதப் படையினர் இ. போ. ச. பஸ் மூலம் ரோந்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் தொடர்ந்து பீதி நிலவுகிறது.

பொதுசனத் தொடர்பு அதிகாரியின் பணிப்பின் பேரில் வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் நேற்று நயினதீவு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

## விளையாட்டரங்கு

# பொன் அணிகள் "போர்"
## (BATTLE OF THE GOLDS)
### 68 ஆவது வருட மாபெரும் கிரிக்கெட் இன்று
### சென். பற்றிக்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் தயார்

யாழ்ப்பாணம், மார்ச் 7
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான 68ஆவது வருட மாபெரும் கிரிக்கெட் (Big Match) ஆட்டமான பொன் அணிகள் போர் (Battle of the Golds) இன்றும் நாளையும் நடைபெறுகின்றது

வடபகுதியின் இரண்டு திறமையான அணிகள் மோதும் சிறப்பு கிரிக்கெட் ஆட்டம் ஒன்றை யாழ்ப்பாண ரசிகர்கள் இன்றும் நாளையும் கண்டு களிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு அணிகளும் இதுவரை பல ஆட்டங்களில் தமது திறமையை நிரூபித்திருக்கின்றன.

சென். பற்றிக்ஸ் அணிக்கு எஸ். ஏ. கிளஸ்ரன் தலைமை வகிக்கிறார். எஸ் ரி.ஏ, செல்வராஜா உதவித் தலைவர்.

ஜி எஸ். சவிரிமுத்து, ஜே. ஆர். பத்திநாதர், என். குணேஸ்வரன், பி. ஆதவன், சி. ஆர். ஜெயவேந்திரா, ஆர். எம். சி. வின்ஸ்லோ, ஏ. எம். நிமல்ராஜ், என். சி. இரத்தினானந்தன், கே. ஜெயகுமார், ஆர். பி. சௌந்திரநாயகம், ரி. ஆர். நித்திலநாயகம், பி. ஈ. ஏபிரஹாம், ஜே வி. ரி. மரியநாயகம் ஆகியோர் சென். பற்றிக்ஸ் அணியை அலங்கரிக்கும் மற்றைய வீரர்களாவர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் அணித்தலைவர் ஜி. இராகவன். உதவித் தலைவர் எஸ். அஃஸ்ரின்.

ஜே. ஜி. யேசுராஜா, ரி ஜேசுரா, ஜே அன்ரன் இராஜசூரியர், பி. சயந்தகுமார், நோபின் சுரேந்திரன், ரி. ஹரிஷி, ஆர். முறேஷ், ரி. நித்தியராஜன், எஸ். விஜயகுமார், எஸ் ஜெயரஞ்சன், ஆர். குலசிங்கம், ரி. ஹரிச்சந்திரன், தவநிருபன் ஆகியோர் யாழ்ப்பாணக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய வீரர்கள் ஆவர்.

இன்றைய ஆட்டம் மதியம் 1-30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-30 மணிக்கு முடிவடையும். நாளை காலை 9-00 மணிக்கு இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகும். மாலை 5-15 மணிக்கு ஆட்டம் முடிவடையும்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி புதிய மைதானத்தில் இந்த நேரடி மோதல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.


இன்று மதியம் ஆட்டம் தொடங்குவதற்கு சற்று நேரம் முன்பாக புதிய மைதானத்தின் பாரிய ஸ்கோர் விவர அட்டவணை (Score Board) திறந்து வைக்கப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு ஏ. கதிர்காமர் இதனை வைபவரீதியாகத் திறந்து வைப்பார்.


அதன் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகும்.

திரு. ஆர். செல்வரத்தினம், திரு. எஸ். உமாகாந்தன் ஆகியோர் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பார்கள்.

ஆட்ட முடிவில் வெற்றி பெறும் அணிக்கும், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த பல்துறை வல்லுநர், சிறந்த பந்து தடுப்பாளர், ஆட்டத்தின் சிறப்பு வீரர் ஆகியோருக்கான பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.



சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி



யாழ்ப்பாணக் கல்லூரி அணி

-- சண். ஹோண்சன் --

# கள்ள நோட்டு
## அடிப்பதில் தமிழர்
### சம்பந்தம் என்கிறார் எம்.பி.

கொழும்பு, மார்ச் 7
கள்ள நோட்டு அடிப்பதில் தமிழர் ஈடுபட்டுள்ளனர். சி ஐ. டி அதிகாரிகளும் அதற்கு உதவுகின்றனர்.

இப்படி அவிசாவளைத் தொகுதி எம் பி. திரு. டி. பிரேமரத்தின (ஐ. தே. க.) குற்றஞ்சாட்டினார்.

மலையக வன்செயல்கள் பற்றிய விவாதம் நேற்றும் நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் நடைபெற்றது.

அவிசாவளை எம். பி. திரு பிரேமரத்தின அந்த விவாதத்தில் கலந்து கொண்டு சபையில் மேலும் சொன்னதாவது:-

1,000 ரூபா கள்ள நோட்டுடன் ஒரு ஆள் பிடிபட்டார் அவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து நாவல பகுதியில் உள்ள ஒரு வீடு சோதனை இடப்பட்டது.

சோதனையின்போது வீட்டில் இருந்து ஒருவர் நழுவ முயன்றார். அவரைப் பொலிஸார் பிடித்து விசாரித்தனர். தான் ஒரு சி ஐ டி அதிகாரி என்று சொன்னார்.

இவ்வீட்டில் இருந்து 74,000ரூபா கள்ளநோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

இக்கள்ளநோட்டு அச்சடித்தலில் தமிழரும் சம்பந்தப்பட்டுள்ளனர். சிங்களவர், சில சி ஐ. டி. அதிகாரிகளும் இதற்கு உதவுகின்றனர்.

இது பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அறிவித்து உள்ளேன்.

இப்படி அவர் சொன்னார்

## ரெலா கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 7
மானிப்பாய் கோவில் பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த கொள்ளையை தமிழ் ஈழ விடுதலை இராணுவம் கண்டித்துள்ளது.

இக் கொள்ளைக்கும் தமக்கும் தொடர்பு கிடையாது என்று தமிழ் ஈழ விடுதலை இராணுவம் அறிவிக்கிறது.

## இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 7
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் தொடர்பாக மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கான கண் பரிசோதனை நாளை சனிக்கிழமை நடைபெறும்.

இலவச மூக்குக் கண்ணாடி விநியோகத் திட்டத்தின் கீழ் கண்ணாடிகளைப் பெற விரும்புவோர் தங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், மூக்குக் கண்ணாடிக்குரிய மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் விண்ணப்பித்துகண்ணாடியைப் பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் எமில் அத்தனாசியர், சில்லாலை, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மருத்துவச் சான்றிதழ் பெற வசதியற்றவர்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனை நாளை சனிக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## அப்பாவித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கு கண்ணியமாகவும், பத்திரமாகவும் திரும்பக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படவில்லை.

### மனித உரிமை மீறல்

இந்த அகதிகள் சொல்லுவதில் இருந்து மனித உரிமைகள் இலங்கையில் மீறப்படுவது தெளிவாகிறது.

வெறும் சந்தேகத்தின பேரில் தமிழரைப் பிடித்துக் கொண்டு சென்று காட்டுமிராண்டித்தனமாகச் சித்திரவதை செய்கின்றனர்.

சிலரைப் படுகொலையும் செய்துள்ளனர்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியன மூலம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் செயல் தமிழ்ச் சமுதாயம் முழுவதையுமே பழி வாங்குவதற்கான துவக்கமாகும்.

இப்படி இந்தியக் குழுத் தலைவர் டாக்டர் தில்லான் கூறினார்.

டாக்டர் தில்லான் இந்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக முன்பு பணியாற்றியவர் [illegible] கது.

## சோவியத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கிடைக்கும்.

சோவியத் தயாரிப்பான சாம் - 7 ஏவுகணைகள் ஆகாயத் தாக்குதலை நடத்தப் போதுமானது.

இலங்கை விமானப் படைக்கு அது ஒரு பலத்த பயமுறுத்தலாக இருக்கும்.

அரச படையினரின் கை உயர்ந்து இருக்கிறது. போராளிகளை சமநிலைப்படுத்தியவுடன் எம் பக்கம் சாதகமான நிலை உருவாகும்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு கடந்த ஜூனில் இந்தியா எம்மை உடன்படச் செய்யும்போது இருந்த நிலைமையை ஏற்படுத்துவோம்

இப்படி அன்ரன் பாலசிங்கம் சொன்னதாக 'கார்டியன்' செய்தி கூறுகிறது.

'கார்டியனில்' வெளிவந்த மற்றொரு செய்தியில் கூறப்படுவதாவது:-

இலங்கை உள்நாட்டு யுத்தத்தில் நன்றாக மூழ்கியுள்ளது.

சென்னையில் உள்ள தமிழ்த் தலைவர்கள் இராணுவ, இராஜதந்திரப் பிரசாரங்களை அதிகரிப்பதற்குத் தயாராகின்றனர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் தமிழருக்கு சுயாட்சி கொண்ட தாயகம் ஒன்றை உழிவாக்குவதே இதன் நோக்கம்.

மத்தியஸ்தத்தில் தோல்வி அடைந்து விட்டதை இந்தியா ஏற்றுக் கொள்கிறது.

அதனால் போராளிகளைக் கட்டுப்படுத்துவதில் அது ஈடுபடவில்லை.

தமிழ்நாட்டில் பயிற்சி பெறவும் ஆயுதங்களையும் ஆட்களையும் பாக்கு நீரிணை ஊடாக இலங்கைக்குக் கொண்டு செல்லவும் புதுடில்லி அனுமதிக்கிறது என்று போராளிகள் தனிப்பட்ட முறையில் கூறுகின்றனர்.

இப்படி 'கார்டியன்' செய்தி கூறுகின்றது.

## வைத்தீஸ்வரர் மஹோற்சவம்

நல்லூர், மார்ச் 7
சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர ஸ்வாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் 7-3-86 இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் பகல், இரவு [illegible] ஆலய உள்வீதியில் நடைபெறும்.

## புலிகளின் சுவரொட்டி

மட்டக்களப்பு, மார்ச் 7
முஸ்லிம்களின் வாகனங்களைக் கடத்த வேண்டாம். முஸ்லிம்களின் பொருள்களைக் கொள்ளை அடிக்க வேண்டாம் முஸ்லிம்களைத் துன்புறுத்த வேண்டாம்.

மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கும் சுவரொட்டிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மட்டக்களப்பில் ஒட்டப்பட்டுள்ளன.

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு,மார்ச் 7
மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது தொலைத் தொடர்புத் திணைக்கள ஊழியர் ஒருவர் உயிரிழந்தார்.

சந்தேகநபர் ஒருவரை தேடி தாண்டவன் வெளிக்குச் சென்ற ஆயுதப்படையினர் பிரஸ்தாப நபரைக் கைது செய்தனர் என்றும் —

அவர் தப்பி ஓட முயன்ற போது சுடப்பட்டார் என்றும் ஆயுதப் படையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

## முதலியார் மகேசன் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 7
தொழில் அதிபரும் சமூக சேவையாளருமான முதலியார் வ. மகேசன் ஜே. பி. கொழும்பில் காலமானார்.

மானிப்பாய் நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. மகேசன், கொழும்பு வயித்திலிங்கம் அன் சன்ஸ் வர்த்தக நிறுவனத்தின் பங்காளராவார்.

இவர் ஆனைக்கோட்டை கிராம சபையின் முன்னாள் தலைவராக இருந்ததுடன் இன்னும் பல பொது நல ஸ்தாபனங்களிலும் தலைமை ஏற்றுப் பணியாற்றிய சிறப்புக்குரியவர்.

## கன்னியாவில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டன.

அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள குமாரின் தாய்தான் தவமணி.

கொலையுண்டவர்கள் மலையகத் தமிழர்கள். விறகு வெட்டுவதற்காக இவர்கள் கடந்த புதன் கிழமை காலை மாங்காயூற்றுக் கிராமத்துக்குச் சென்றதாக அறியப்படுகிறது.

மற்ற நான்கு சடலங்களும் இன்னும் அடையாளம்காணப்படவில்லை.

அவற்றில் இரண்டு பெண்களின் சடலங்கள். மற்ற இரண்டும் ஆண்களுடையவை. 6 வயதுச் சிறுவனின் சடலமும் இதில் அடங்குகிறது.

உப்புவெளிப் பொலிஸாரே சடலங்களை திருமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தனர்.

உயிர் தப்பிய குமார் நேற்றுக் காலை வீதியில் அறிவிழந்த நிலையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

அவரை ஊர் மக்கள் சிலர் ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்ப்பித்தனர். அதைத் தொடர்ந்தே ஆறு சடலங்களும் மாங்காயூற்றில் கண்டுபிடிக்கப்பட்டன.

## பூசை நிறுத்தம்

புங்குடுதீவு, மார்ச் 7
சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயப் பகுதி வெறிச்சோடிக்கிடக்கிறது. தினசரி ஆறு வேளைப் பூசைகள் நடைபெற்ற இவ் ஆலயத்தில் தற்போது பூசைகள் எதுவுமே நடைபெறுவதில்லை.

ஆலயப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக அதன் புனிதத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிராயச்சித்தக் கிரியைகள் நடைபெற்ற பின்னரே ஆலயத்தில் நித்திய பூசைகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கடத்தல்

திருகோணமலை, மார்ச் 7
மூதூர்த் தொகுதியில் சம்பூர்க் கிராமத்தில் 2 முஸ்லிம் நபர்கள் கடத்தப்பட்டனர். மார்ச் 4 ஆம் திகதி இவர்கள் கடத்தப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

தகவல் கொடுப்பவர்கள் என்ற சந்தேகத்தின் மீது இவர்கள் கடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது

## செயலக ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
பெண்கள் உட்பட பலரை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அரியாலையைச் சேர்ந்த திரு. ஈ கே. குமரையா அவர்களை நாம் விசாரணைக்காக 5 - 3 - 86 அன்று அழைத்துச் சென்றோம்.

யாழ் அரசாங்க அதிபரின் பணிப்பின் பிரகாரம் இராணுவ முகாமிற்கு செல்லும் இவரிடம் ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் சிலர் விடுதலைப் போராளிகள் பற்றிய தகவல்களைப் பெற முற்பட்ட தகவல் எமக்கு கிடைக்கப்பெற்றது. இவரை நாம் தீவிர விசாரணை மேற்கொண்டதில் இவர் மீது எவ்வித குற்றமுமில்லை என சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமானதால் இவரை நாம் நிரபராதியாகக் கருதி விடுதலை செய்கின்றோம் — என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

## கீரிமலை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
பொருட்டு இங்கு வந்து கண்டகி தீர்த்தத்திலாடி இறையருள் பெற்றான் என நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

நகுலேஸ்வர ஆலயத்தில் வேத சிவாகம முறைப்படி நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சிவராத்திரி, சோமவாரம், பிரதோஷம், திருவெம்பா ஆகிய விசேட தினங்களில் அபிஷேகம் பூசை என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதி சனிக்கிழமை தோறும் சனீஸ்வரப்பெருமானுக்கு தலதீபமேற்றி அடியார்கள் வழிபாடு செய்கிறார்கள். கேதார கௌரி விரதமும் அங்கு பக்தர்களால் நல்ல முறையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

நகுலேஸ்வர ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் கடந்த 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெற்று தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும். ஆலயங்கள் உற்சவத்தின் [illegible] மையை நன்கு [illegible] யுள்ளன.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீட்ட திகதி 07-03-1986

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60 JN/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org